1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தவறுகள் செய்தால் அவர்கள் நீக்கப்படுவதற்கான விதிமுறைகள் ஏற்கனவே இருக்கின்றன. இப்பொழுது எப்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்களோ அதைப்போன்றே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

திரு. சி. க. வடிவேலு : தலைவர் அவர்களே, நகராட்சித் தேர்தல்களிலே கட்சிச் சின்னம் ஒதுக்கப்படுவதுபோன்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல்களிலும் கட்சிச் சின்னம் பயன்படுத்த அரசாங்கம் ஆணையிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் நேரடியாக நடத்தப் போகிறோமா என்பதைபற்றி முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு யோசிக்க வேண்டிய விஷயம் அது.

வந்தவாசிப் பேரூராட்சிக்குக் கடன்.

*180. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ம் ஆண்டில், கடைகள் கட்டுவதற்கென வந்தவாசி பேரூராட்சிக்கு அரசு கடனுதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூபாய் 8,000.

திரு. கே. எ. வகாப் : அங்கே கடைகள் கட்டப்படுகிற வேலை மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. மேற்கொண்டு தொகை சாங்ஷன் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இவ்வாண்டு 8 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக வேண்டுமானால் அடுத்த ஆண்டிலே வரவு-செலவுத் திட்டத்திற்குப் பிறகுதான் அதுபற்றிப் பார்க்க வேண்டும்.